Jayagovind Harigopal Agarwal
AGARSEN COLLEGE

# JHA அகர்சன் கல்லூரி

மாதவரம், சென்னை - 60

தமிழ்த்துறை மற்றும் டுடே பன்னாட்டு ஆய்விதழ்
இணைந்து நடத்தும்

# பன்னோக்குப் பார்வையில் தமிழ் இலக்கியங்கள் பன்னாட்டுக் கருத்தரங்கம்

நாள் : 25.03.2026


பதிப்பாசிரியர்
முனைவர் இரா. சாந்தி
தமிழ்த்துறைத் தலைவர்

தொகுப்பாசிரியர்கள்
திரு. அ. மகேஷ்
முனைவர். ஆ. கௌசல்யா
முனைவர். இரா. மருதவேல்
முனைவர். பா. புவனேஷ்வரி

| | | |
|---|---|---|
| 60 | Comprehensive Guide to Emily Dickinson: A Literary Reference on Her Life and Contributions<br>- Mrs JERRY ELKHA K | 366 |
| 61 | முல்லைப்பாட்டில் சூழலியல் பதிவுகள்<br>- திருமதி கோ. ஹேமலதா | 370 |
| 62 | தமிழ் நாவலின் வரலாறும் தன் வரலாற்று நாவலின் தோற்றமும்<br>- க. கௌசல்யா தேவி | 375 |
| 63 | பன்முகப் பார்வையில் பாரதிதாசன் படைப்புகள்<br>- மா. சாந்தலட்சுமி | 384 |
| 64 | யுவன் சந்திரசேகரின் கதைப்போக்கு<br>- முனைவர் இர. பிருந்தாவதி, | 395 |
| 65 | சங்கம் நவிலும் தொழிலும் வணிகமும்<br>- முனைவர் சௌ. பா. சாலாவாணிஸ்ரீ | 400 |
| 66 | புறநானூறு புலப்படுத்தும் கைம்பெண்களின் அவல நிலை<br>- முனைவர் இரெ. மிதிலா | 406 |
| 67 | முல்லைப்பாட்டின் அழகியல்<br>- முனைவர் கி. காவேரி | 411 |
| 68 | சமுதாய வீதி நாவலில் பெண்பாத்திரப் படைப்பு<br>- முனைவர் ப. வனிதா | 416 |

# 63. பன்முகப் பார்வையில் பாரதிதாசன் படைப்புகள்

மா. சாந்தலட்சுமி
முனைவர் பட்ட ஆய்வாளர்
நெறியாளர் முனைவர் ம. பிரகாஷ்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்
பல்லாவரம், சென்னை – 600117.

## முன்னுரை

தமது கவிதைகள், நாடகங்கள், புதினங்கள், கட்டுரைகள், சிறுகதைகள் என எண்ணற்ற படைப்புகளால் சமூகத் தொண்டாற்றியவர், செந்தமிழ்த் தேனியின் தாசன் பாரதிதாசன். எண்ணியதை எண்ணியபடி வெளிப்படுத்தும் படைப்புகளில் மிகச் சிறந்தபடைப்பு, சிறுகதைகள். சிறுகதைகள் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பவை. எளியோரும் வலியோரும் புரிந்து கொள்ளும் விதத்தில் அமைபவை. அத்தகைய சிறுகதைகளில் வாழ்க்கை விழுமியங்கள் மூலம் வாழ்க்கையைப் பயனுள்ளதாக மாற்ற முடியும் என்பதைத் தம் சிறுகதைகள் மூலம் பாவேந்தர் விளக்கியுள்ளார்.

ஆழி சூழ் உலகிலே ஆர்ப்பரிக்கும் வாழ்க்கை ஓட்டத்தில் மறந்து போன வாழ்க்கை விழுமியங்களைப் பாமரனும் புரிந்துகொள்ளும் வகையில் இனிய எளிய நடையில் சிறுகதைகளாக அளித்து சிறப்பு செய்தவர் பாவேந்தர் அவர்கள். பாவேந்தர் தனது சிறுகதைகள் மூலம் எடுத்துரைத்த வாழ்க்கை விழுமியங்கள், எல்லா காலங்களுக்கும் பொருந்தக் கூடியதாக உள்ளன. தோன்றுவதும் மறைவதும் எல்லா உயிர்களுக்கும் பொதுவானது என்றாலும் பின்பற்றும் விழுமியங்கள் மூலம் வாழ்க்கையைப் பயனுள்ளதாக மாற்ற முடியும் என்பதைத் தம் சிறுகதைகள் மூலம் பாவேந்தர் பாங்காக அளித்துள்ளார். பாரதிதாசன் தம் சிறுகதைகள் மூலம் அளித்துள்ள விழுமியங்களை வாழ்வில் கடைப்பிடித்தால் அச்சமின்றி உச்சத்தை தொட முடியும்.

## மன்னிப்பு

**இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு** (குறள்- 987)

துன்பம் செய்தவருக்கும் மன்னிப்பளித்து அவருக்கு நன்மை செய்வதே சான்றாண்மை என்கிறார் வள்ளுவர். இக்கருத்தை வலியுறுத்தும் வகையில் பாவேந்தர் சிறுகதையை எழுதியுள்ளார். 'மனச்சாட்சி' என்னும் சிறுகதையில் பொன்னியும் முருகியும் தோழிகள். பொன்னி ஐந்து அனாவுக்கு ஒரு பெட்டைக்கோழி வாங்கினாள். அது இட்ட பெரிய சுவையான முட்டையைத் தோழி முருகிக்கு கொடுக்கிறாள். முருகிக்கு இத்தகைய சுவையான முட்டை தனக்கு தினமும் கிடைத்தால் நன்றாக இருக்குமே என்று தோன்றுகிறது. பொறாமை வந்து விடுகிறது. தோழியின் கோழியைத் திருடி மறைத்து வைத்துவிடுகிறாள். தோழி தேடிய போதும் உண்மையைச் சொல்லாமல் மறைக்கிறாள். மனச்சாட்சி உறுத்துகிறது. கோழியைத் தூக்கிக் கொண்டு ஓடிப்போய் தோழியிடம் மன்னிப்பு கேட்கிறாள். கிடைத்த அந்த மன்னிப்பில் ஐநூறு கோழியினால் ஏற்படும் இன்பம் ஏற்பட்டது என்று மன்னிப்பின் சிறப்பை விளக்கும் சிறுகதை இனிதே முடிவடைகிறது .

சமகாலத்தில் வாழும் மக்களின் மனநிலை பேராசை கொண்டதாக இருப்பதையும், அதனால் தொடர்ந்து ஏற்படுவது துன்பம் என்பதையும் இக்கதையில் அழகாக சொல்வதோடு செய்த தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்பது மட்டுமே நிம்மதிக்கு வழிவகுக்கும் என்பதை உறுதி கதாபாத்திரமூலம் எடுத்துரைக்கிறார்.

இந்தச் சிறுகதை நம் மனதில் ஏற்படும் மாயத்தை வேறு எந்த முறையிலும் ஏற்படுத்த முடியாது என்பது திண்ணம். முறுகி பொறாமையால் தவறு செய்ய கதாபாத்திரத்தை அமைத்திருக்கிறார். பிறரை மன்னிப்பது என்பது அவர் செய்யும் தவறை பொறுத்துக் கொள்வது என்று நாலடியாரும் கூறுகிறது.

**கயத்தாது பிழையாது காக்கைக்கு நெய்தூற்று**
**பைய புதைத்தவர் போல. (நாலடியார் 64)**

நெஞ்சில்லாத தன்மையுடன் ஒருவரது பிழைகளை காக்க நினைப்பது பொறுத்துக் கொள்வது மன்னிப்பு என்றே சொல்ல வேண்டும் என்கிறது நாலடியார். இவ்வாறு வாழ்க்கைக்கு வளம் சேர்க்கும் மன்னிப்பு என்னும் விழுமியத்தை பாமரனும் உணரும் வண்ணம் எளிமையான கதாபாத்திரங்கள் மற்றும் மிகத் தெளிவான சொற்களால் அழகான சிறுகதையை அமைத்திருக்கிறார் பாரதிதாசன். தனி மனிதன் இவ்விழுமியங்களை ஏற்றுக்

கொண்டால் மட்டுமே சமூகத்தில் அமைதி நிலவும் என்னும் உயர் எண்ணம் இல்சிறுகதையில் தெள்ளத் தெளிவாக விளங்குகிறது.

**ஒற்றுமை**

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்னும் பழமொழி எல்லா நிலைகளிலும் அனைத்து உயிர்களுக்கும் பொருந்தக்கூடிய ஒன்றாகும். 'ஒற்றுமையே பலம்' என்னும் இச்சிறுகதையை குயில் நாளிதழில் சுதந்திரம் பெற்ற ஓராண்டுக்கு பிறகு மக்களுக்கு உண்மை நிலைமையை எடுத்துச் சொல்லும் விதமாக எழுதி இருக்கிறார். இச்சிறுகதையில் ஒரு காட்டில் சிங்கம் நரிக்கு, யானைகளையும் காட்டு எருமைகளையும் பார்த்துக் கொள்ளும் அதிகாரம் கொடுத்தது. நரி அதை தனக்குச் சாதகமாக பயன்படுத்தியது.அதற்கு புள்ளி மான்களைக் கண்டால் பிடிக்காது. அதற்காகப் புள்ளிமான் கூட்டத்திலேயே 10 மான்களைத் தேர்ந்தெடுத்து அதிகமான புற்களை உண்ணக் கொடுத்து அவற்றை வைத்தே புள்ளிமான்களை அழிக்க சதி செய்து காரியம் சாதித்தது.

ஒரு நாள் குள்ளநரி தன் மனைவியிடம் தன் தந்திரத்தைக் கூற அதைக் கேட்டு புள்ளி மான்கள் விழித்துக் கொண்டன. தங்கள் குழுக்களுக்குச் சென்று செய்தியைக் கூறி ஒன்றுபட்டன. இதை அறிந்த குள்ள நரி தன் மனைவியுடன் உயிர் நீத்தது. புள்ளிமான்களின் ஒற்றுமை வென்றது. புரட்சிக் கவிஞர் இக்கதையில் கூற வந்தது புள்ளிமான் கதையோ நரி கதையோ அல்ல. மாறாக ஆங்கிலேயர்கள் மக்களிடையே பிரித்தாளும் சூழ்ச்சியை பயன்படுத்தினார்கள் என்பதை மறைமுகமாக எடுத்துச் சொல்வதற்காக இச்சிறுகதையை வடிவமைத்து இருக்கிறார். புள்ளிமான்கள் ஆகிய மக்கள் ஒன்றுபட்டதால் நாட்டாமை செய்த நரி இறந்தது என்று ஆங்கிலேயர்களின் ஆட்சி வீழ்ந்ததை குறிப்பிடுகிறார். மக்கள் இருந்த இழி நிலைமையைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் வகையிலே இந்த எளிமையான சிறுகதையை எழுதியுள்ளார் . மக்களின் மீது அவருக்கு இருந்த பேரன்பையும் ஆங்கிலேயர்களை விரட்டி அடித்த பெரு மகிழ்ச்சியையும் இச்சிறுகதையில் காண முடிகிறது .

**முயற்சியே வாழ்வு**

முயற்சி என்பது மூச்சுக் காற்றாய் இருக்கும் வரை இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கும் . முயற்சி மட்டுமே இவ்வுலகில் மாற்றத்தை கொண்டு வரும் . ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைவதற்காக நம்முடைய உடலையும் மனதையும் ஒருங்கிணைத்து ஆற்றலுடன் தொடர்ந்து செயல்பட்டு அந்த இலக்கை அடைவதே முயற்சி என்று வரையறுக்கப்படுகிறது.

இவ்வுலகத்தில் உள்ள ஆகச் சிறந்த வினை முயற்சி என்பதாகும் . நம்முடைய சிறுவயதிலிருந்தே இந்த முயற்சி என்ற விழுமியத்தை நம் மனதில் பதிப்பதற்காக முயல் ஆமை கதைகள் சொல்லப்பட்டுள்ளன. காலங்கள் மாற மாற முயற்சி என்பது வெவ்வேறு வினைகளுக்கு ஏற்ப செயலாற்ற வேண்டியதாக மாற்றம் பெறுகிறது . எத்தகைய செயலானாலும் முயற்சியே பலன் தரும் என்பதை வள்ளுவரும் கூட,

**முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்** (குறள்-616)

மேற்கண்ட குறளில் இருந்து முயற்சி மட்டுமே உயர்வைத் தரும் என்றும் முயற்சி இன்மை நம்மை துன்பத்தில் ஆழ்த்தி விடும் என்பதையும் தெளிவாக உணர்கிறோம். முயற்சியை வலியுறுத்தும் 'முயற்சியே வாழ்வு சோம்பலே சாவு' என்னும் சிறுகதையில் திருப்புளிசாமிக்கு இனிப்பு நீர்ப் பிணி இருப்பதால் ஒரு நாள் காலை வில்வ துளிர்கள் ஐந்தை மறுநாள் நாவல் துளிர்கள் ஐந்தை மென்று விழுங்க வேண்டும். இப்படி 40 நாட்கள் செய்தால் நீர்ப் பிணி நீங்கிவிடும் என்றார் மருத்துவர்.

நாள்தோறும் அதிகாலை எழவில்லை. கொழுந்து பறிக்க ஆள் வைக்க நினைத்தார் அதையும் வைக்கவில்லை. இலையை அரைத்துச் சாப்பிட வேண்டுமா? என்று மருத்துவரை இன்னும் கேட்கவில்லை. மரம் நட்டு விட்டு மூன்று வேளையும் பச்சரிசி சோறு தின்று வளர்ச்சி அடைந்தது நீர்ப்பிணி. இனிப்பு நீர்ப் பிணியால் சாகக் கிடந்த கொள்ளை வீட்டு குப்புசாமி திருப்புளி வீட்டு நாவலும் வில்வமும் தன் கொள்ளைப் புறத்தில் தலை காட்டிய நாள் முதல் வில்வ நாவல் கொழுந்துகளை உண்டு தேறினான்.

முயற்சி உடைய குப்புசாமி நீர்ப் பிணி நோய் அகன்று வளமாக வாழ்ந்தான். முயற்சி அற்ற திருப்புளிசாமி பிழைப்பேனா, சாவேனா? என்று அவநம்பிக்கையில் கிடந்தான் . முயற்சி வாழ்வளித்தது சோம்பல் சாகடித்தது. இக்கதையை நாம் மேம்போக்காக முயற்சி பற்றிய சிறுகதை என்று எடுத்துக்கொள்ள இயலாது. இந்த கதையை எழுதிய புரட்சிக் கவிஞர் கதை கருவை அவ்வளவு எளிதாக அமைப்பவர் அல்லர். இயற்கை மருத்துவம் மறைந்து செயற்கை மருத்துவம் மக்களை ஆட்படுத்திய வேளையில் விழிப்புணர்வு ஊட்டுவதற்காகவும் உடல் உழைப்பின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காகவும் சோம்பிக் கிடந்த மக்களை தட்டி எழுப்புவதற்காகவே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நாவலும் வில்வமும் முயற்சியும்

ஆரோக்கியத்திலும் வாழ்க்கையிலும் ஏற்படுத்தும் மாற்றத்தை தெற்றென விளக்கிச் சொல்லியிருக்கிறார் .

**வைகறைத் துயில் எழுதல்**

அன்று முதல் இன்று வரை தொண்டு தொட்டு வைகறை துயில் எழுதல் என்னும் வாழ்வியல் விழுமியம் பெரிதும் அனைவராலும் மதிக்கப்படக்கூடிய விழுமியம் ஆகும். அதிகாலை என்று கூறப்படுவது விடியற்காலை 2மணி முதல் 6 மணி வரை உள்ள இடைப்பட்ட நேரமாகும். இந்நேரத்தில் எழுவதும் நீராடுவதும் இறைவனை வழிபடுவதும் சிந்திப்பதும் பிராணாயாமம் போன்ற நுரையீரல் சம்பந்தமான பயிற்சிகளை செய்வதும் வா வெற்றிக்கு வழிவகுக்கும் என்று ஆசாரக்கோவை குறிப்பிடுகிறது.

**வைகறை யாமம் துயில் எழுந்து, தான் செய்யும்**
**நல் அறமும் ஒண் பொருளும் சிந்தித்து, வாய்வதின்**
**தந்தையும் தாயும் தொழுது எழுக!' என்பதே-**
**முந்தையோர் கண்ட முறை.** **ஆசாரக்கோவை -41**

ஒப்பற்ற விழுமியத்தை மக்கள் மனதில் விதைக்கும் வண்ணம் வைகறை துயில் எழு என்னும் சிறுகதையை வடிவமைத்திருக்கிறார். இக்கதையில் வரும் கதாபாத்திரமான விடியா மூஞ்சி வேலைக்குப் போனான். வேலை கிடைத்தும் கூலி கிடைக்கவில்லை. விடியா மூஞ்சி காலை எட்டரை மணிக்கு வேலைக்குப் போனான். ஆனால் வேலைக்கு அமர்த்துபவர்கள் பெயர்களை காலை 8:00 மணிக்கு குறித்துக்கொண்டு போய்விட்டான் முதலாளி.

முதலாளி மேற்பார்வைக்கு அங்கே வந்தான் விடியா மூஞ்சி ஒரு குட்டிச்சுவரின் மேல் தலையை வைத்துக் கொண்டு தூங்கிக் கொண்டிருந்தான். ஆட்கள் கூலி வாங்கினார்கள். விடியா மூஞ்சிக்கு ஒரு நயா பைசாவும் கிடைக்கவில்லை. விடியா மூஞ்சி ஓராண்டு முயன்று காலை 6:00 மணிக்கு எல்லாம் கண்விழிக்கும் பழக்கத்தைக் கற்றுக்கொண்டான். வைகறைத் துயில் எழும் பழக்கம் வாழ்க்கையை மாற்றியது. 'குயில்' இதழில் எளியோரும் உணர்ந்து கொள்ளும் வகையில் இவ்வாழ்க்கை விழுமியத்தை படைத்திருக்கிறார்.

**பெண்ணிற்கு நீதி**

**"பெண்மை வாழ்க என்று கூத்திடுவோமடா பெண்மை வெல்க என்று கூத்திடுவோமடா"** என்ற பாரதியின் வரிகள் பெண்கள் போகப் பொருளாக பார்ப்பது தவிர்க்கப்பட வேண்டும் என்றும், ஆற்றலாலும் அறிவாலும்

கல்வியாலும் பெண்கள் சமூகத்திலே பெருமிதத்துடனும் மரியாதையுடனும் நடத்தப்பட வேண்டும் என்று கனவு கண்ட வரிகள் இவை. பெண்கள் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் அவர்கள் மீதான பார்வை சமூகத்திற்குளவ்வாறு இருக்கிறது என்பன போன்ற கருத்துக்களை தெளிவாக விளக்கும் விதமாக 'படம் இயக்கியின் தங்கை' என்ற சிறுகதை அமைந்திருக்கிறது .

'படம் இயக்கியின் தங்கை' என்ற சிறுகதையில் 'வேலனுக்கு விண்ணப்பம்' என்ற கதை திரைப்படமாக்கப்படுகிறது. அதில் நடிப்பதற்கு நாட்டியக்காரி பொன்னம்மா அரைகுறை ஆடையில் ஜோடிக்கப்பட்டு ஆடினாள் பாடினாள், படம் எடுக்கப்பட்டது இயக்குனருக்கும் முதலீட்டாருக்கும் மிகுந்த மகிழ்ச்சி. படம் ஆறு வாரங்களைத் தாண்டி திரையரங்குகளில் ஓடியது. படம் நன்றாக ஓடியதற்குக் காரணம் பொன்னம்மாவின் ஜோடிப்புதான் என்று அனைவரும் பேசிக் கொண்டார்கள். அடுத்ததாக படம் இயக்கியின் தங்கை அடுத்த படத்திற்கு அவ்வாறே ஜோடிக்கப்பட்டாள். படம் இயக்கி கத்தினான். தன் தங்கை தங்கத்திற்கு அரைகுறை ஆடை வேண்டாம் என்றான். முதலாளி கேட்டார், "ஐயா படம் இயக்குனரே, தங்கம் தங்கள் தங்கை என்றால்,சென்ற படத்தில் அரைகுறை ஆடையில் நடித்த பொன்னம்மா என்னவாம்?" என்று கேட்டார்.

"பெண்கள் நாட்டின் கண்கள் 'அவர்கள் உடலாக பார்க்கப்படாமல் உயர்வாக பார்க்கப்பட வேண்டும் என்ற வாழ்க்கை விழுமியத்தைத் தன்னுடைய உயர்ந்த சிறுகதை மூலம் பாவேந்தர் விளக்கியுள்ளார். சமூகத்திற்கு அவர்கள் மீதான பார்வை உயிர்வழியை தரக்கூடியதாகவும் பாதுகாப்பதும் நமது தலையாய கடமையாகும்.

**மரங்கள் பாதுகாப்பு**

தொன்று தொட்டு மரங்கள் தாவர வகைகள் என்று பிரிக்கப்படாமல் மக்கள் வாழ்க்கையில் ஓர்அங்கமாக ஐந்திணைகளின் அடையாளமாக மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து இருந்த உயிர்களாக மரங்கள் திகழ்ந்தன. மரம் நடுவது அடுத்த தலைமுறைக்கு செய்யும் மிகப்பெரிய சேவை ஆகவே கருதப்பட்டது. மருத்துவ குணம் நிறைந்த மரங்கள் கடவுளாக தொழப்பட்டன. தங்களில் ஒருவராக மரங்களுக்கு ஆடை அணிவித்து வழிபடும் பழக்கமும் இருந்தது. மரங்களை அழிப்பது பெரும் பாவம் என்னும் நம்பிக்கையும் நிலவியது. பல்வேறு உயிரினங்களின் அடைக்கலமாகவும்

உயிர்வழியை தரக்கூடியதாகவும் உள்ள மரங்களைப் பாதுகாப்பது நமது தலையாய கடமையாகும்.

இலக்கியங்களின் முக்கியத்துவத்தைப் பற்றி சொல்லும் இடங்களில் கூட மருத்துவ குணம் நிறைந்த மரங்களை அடங்கி மொழியாக கூறிய சான்றுகளும் உள்ளன. "ஆளும் வேலும் பல்லுக்கு உறுதி நாளும் இரண்டும் சொல்லுக்கு உறுதி" என்னும் தொடரில் ஆலமரமும் வேல மரமும் பற்களுக்கு உறுதி தருவதுபோல நாலடியாரும் திருக்குறளும் சொல்லுக்கு உறுதி அளிக்கிறது என்று மரங்களைப் அடைமொழியாக மரங்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தன. மரங்களை வெட்டுவது மனிதர்களை வெட்டுவது போன்ற கொலை குற்றமாக கருதப்பட்டது. இக்கருத்தை உணர்த்தும் விதமாக அஞ்சிய உள்ளத்தில் என்னும் சிறுகதையை படைத்துள்ளார் .

'அஞ்சிய உள்ளத்தில்' என்னும் சிறுகதையில் வேங்கையும் புலிக்குட்டியும் முரடர்கள். வேடப்புலியூரில் உள்ள மக்கள் வெள்ளாட்டுக்கறியை நெய்யில் வேகவைத்து உண்டு செரிமானத்திற்கு மருந்து குடித்து மாடு போல் உறங்கும் செல்வந்தர்கள். எனவே அவர்களிடம் உள்ள பணத்தையும் நகையையும் திருடிவிட்டு, மாட்டிக்கொண்டால் நிற்க வைத்து விசாரிக்கும் ஆலமரத்தை முன்னெச்சரிக்கையாக வெட்டிவிட வேண்டும் என்று முடிவு செய்து, ஊர்மக்கள் அனைவரும் ஆளுக்கு ஒரு கோடரி கொண்டு வந்து மரத்தை வெட்ட வேண்டும் என்று முரடர்கள் கட்டளையிட்டார்கள். அவ்வூர் கணக்காயர் படித்தவர், சற்று அஞ்சிய உள்ளம் கொண்டவர். அவரும் அவரது மனைவியும் இந்த மரம் வெட்டும் யோசனைக்கு உடன்படவில்லை, துணை நிற்கவில்லை.இதை அறிந்த முரடர்கள் அவர்களது தலையை வெட்டி ஆல மரத்திற்கு அருகில் கொண்டு வந்தார்கள்.

இதனைக் கண்ட பொதுமக்கள் கேள்வி கேட்டனர்,

கணக்காயர் ஏன் சாகத் துணிந்தார்?

ஆலமரத்தை வெட்டக்கூடாது என்பதற்காக .

சிவன் கோயிலை விட ஆலமரம் பயனுள்ளது என்பது கணக்காயர் கருத்தா ?

வேறென்ன?

இந்த வினா விடை முடியும் முன்பே முரடர்கள் வெட்டப்பட்டு ஆலமரத்திற்கு உரமாக புதைக்கப்பட்டார்கள். மரங்கள் பாதுகாப்பை வேறு எவரும் எவ்வளவு சிறப்பாகச் சொல்லிவிட முடியாது. பாவேந்தர் இதைச் சிறப்பாக செய்திருக்கிறார்

**சமூக நல்லிணக்கம்**

பல்வேறு வேற்றுமைகள் நிறைந்த சமூகத்தில் ஒற்றுமையுடனும் நல்லிணக்கத்துடனும் வாழ்வதற்கு சமூக நல்லிணக்கம் என்று பெயர். ஒரு சமூகமும் நாடும் திறம்பட செயல்படுவதற்கு சமூக நல்லிணக்கம் மிக அவசியம் என்பதை வலியுறுத்துவதற்காக ஆண்டுதோறும் ஏப்ரல் இரண்டாம் நாள் தேசிய நல்லிணக்க நாள் கொண்டாடப்படுகிறது.

சமூக நல்லிணக்கம் குறித்த விழிப்புணர்வை பல்வேறு கவிஞர்களும் எழுத்தாளர்களும் தங்கள் பாடல்கள் மற்றும் கட்டுரைகள் மூலம் பல்வேறு விதங்களில் மக்களுக்கு எடுத்துரைத்து வருகின்றனர் அவ்வகையில் பாரதிதாசனின் முரசு பாடலில்,

**வெள்ளை நிறத்தொரு பூனை....**
**வண்ணங்கள் வேற்றுமை பட்டால் அதில்**
**மானுடரர் வேற்றுமை இல்லை**
**எண்ணங்கள் செய்கைகள் எல்லாம் இங்கு**
**யாவருக்கும் ஒன்றெனல் காணீர்**

என்று பூனைகள் பல்வேறு நிறத்தில் இருப்பது போல மக்கள் பல்வேறு கலாச்சாரங்களில் யாவரும் சமமே என்ற சமூக நல்லிணக்கத்தை எளிமையாக கூறுகிறார் பாரதி. பாரதியின் வழி வந்த அவரது சீடரான பாரதிதாசனும் இக்கருத்தையே வலியுறுத்தி சிறுகதையை படைத்துள்ளார். வேற்றுமையின்றி ஒற்றுமையாய் வாழ்வதற்கு சமூக நல்லிணக்கம் மிக மிக அவசியமானது. இதை பாரதிதாசன் தன்னுடைய 'கண்ணுக்குத் தெரியாத சுமை' என்ற சிறுகதையில் அழகாக எடுத்துரைக்கிறார். செவ்வாய் கிரகத்திற்கு ஆதிதிராவிடர், கிறிஸ்துவர், பிராமணர், வைசியர் முதலான அறுவர் செல்கிறார்கள்.

அங்கே செவ்வாய் கிரகத்தில் மக்கள் குள்ளமாகவும் தலையில் ஒரு கல்லைத் தொடர்ந்து சுமந்து கொண்டும் இருக்கிறார்கள். இதைப் பார்த்த நம் மக்கள் வியக்கிறார்கள். அங்கு பூனை குணமும் பலாப்பழ உருவத்திலும் ஒரு உயிர் இருக்கிறது. அந்த விலங்கு இவர்கள் சமைத்த உணவை இடம் மாற்றி வைத்து விடுகிறது. திரும்பி வரும் பிராமணர், தன்னுடைய சமைக்கப்பட்ட உணவு ஆதி திராவிடரின் இடத்தில் இருப்பதைப் பார்த்து, கோபம் கொள்கிறார்; பூசல் வருகிறது. அதைப் பார்த்த செவ்வாய் கிரகத்து மக்கள் நீங்கள் பிரிவுகளைச் சுமக்கின்றீர்கள். நாங்கள் கற்களை மட்டுமே சுமக்கிறோம்

அதனால் எங்களுக்கு பாதிப்பு இல்லை, ஆனால். நீங்கள் சுமக்கும் பிரிவுகள் என்னும் கற்கள் ஆபத்தானவை. அவை உங்களை அழித்துவிடும் என்று சொல்வது போல அழகான அர்த்தம் மிகுந்த உரையாடல்களை அமைத்திருக்கிறார். செவ்வாய் கிரகத்து மக்கள் சுமக்கும் கற்களை விடவும் வேற்றுமை எனும் கல் நம்மை அழிக்கும் என்பதை ஆணித்தரமாகக் கதை மூலம் விளக்குகிறார்.

**தேசபக்தி**

தேசத்தின் மீதான பற்றும் தேசத்திற்கு பாடுபட்ட வீரர்கள் மீதான அன்பு இவை அனைத்தும் சேர்ந்ததே தேச பக்தி. **உயிர் போகும் நிலையிலும் கொடியை கீழே விடாத** தேசபக்தி கொண்ட திருப்பூர் குமரன் வாழ்ந்த நாடிது. நம் தேசம் மீது பாசம் காட்டாமல் பாரபட்சமாக நடந்து கொள்வதை விளக்குவதற்காக தேசிய பத்திரிகைகள் என்னும் சிறுகதையை பாரதிதாசன் படைத்திருக்கிறார். வளர்ப்புத் தாயைப் பார்த்து, சங்கரன் என்ற மகன் எனக்கு "நீ ஓட்டைச் செம்பில் பாலை கொடுத்தாய். அதில் பால் இல்லவே இல்லை" என்று கடிந்து கொள்கிறான் பின்னர் சுற்றுலா செல்லும் இடம் எங்கும் தன் தாய் ஓட்டை செம்பில் பால் கொடுத்ததாகவும் அதனால் தான் பட்டினியில் வாடுவதாகவும் பல்வேறு இடங்களில் தாயைப் பற்றி அவதூறு பேசுகிறான்.

தாயும் வழக்கம் போல மகன்தானே என்று அவன் சொல்லும் அனைத்து பழி பாவங்களையும் கேட்டுக் கொண்டு அமைதி காக்கிறாள் இறுதியாக வீட்டிற்கு வந்து சங்கரன் தான் வைத்ததாக சொன்ன ஓட்டை செம்பில் நீரூற்றி சரி பார்க்கிறாள் அச்சம்பில் ஓட்டையே இல்லை என்பது பிறகுதான் புரிகிறது இப்படித்தான் சில பத்திரிகைகள் நம் நாட்டின் மீதான பக்தியை காட்டாமல் பலித்து கொண்டும் பிறரை உயர்த்தி பேசிக்கொண்டும் இருக்கின்றன என்று சிறுகதையை படைத்துள்ளார்.தேசிய பத்திரிகைகள் சங்கரன்போல இராமல் தமிழ்நாடு என்னும் தாயின் மட்டில் பொறுப்போடும் அன்போடும் தொண்டு செய்ய வேண்டும்.

**தமிழ்ப்பற்று**

மொழியின் மீது நமக்கு இருக்கும் பற்றும் அதை பயன்படுத்தும் போது நமக்கு ஏற்படும் இன்பமும் அதை வளர்க்க வேண்டும் என்ற எண்ணமும் மொழி பற்றில் அடங்கும். பாரதிதாசன் எழுதிய திருந்திய ராமாயணம் என்று சிறுகதையில் ஒரு காட்சி. தசரத ராமனுக்கு பட்டம் கட்டுவதற்கு சில தடைகள் இருக்கின்றன அதனால் தான் நம்முடைய ஆதரவை அவர் நாடுகிறார் ஸ்ரீமதி

கையையே அவர் மனம் புரிய எண்ணி கைகேயியின் தகப்பனான கேக் ஐயனே கேட்டபோது அவன் உனக்கு கௌசலை முதற்கொண்டாட்டியிருக்க என் பெண்ணை கொடு ஏன் என்றால் அதற்கு தசரதர் ஓகே கய மன்னரே நீர் உன் பெண்ணை எனக்கு கொடுத்தால் உன் பெண் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கு ரகசிய பட்டாபிஷேகம் செய்கிறேன் என்றால் இதற்கு சம்மதித்து அந்தப்படியே உடன்படிக்கை எழுத சர்வதேச சங்கத்தில் ரெஜிஸ்டரும் செய்யப்பட்டது இது ஒரு தடையாய் இருக்கிறது இது அல்லாமல் சம்பரன் என்னும் தமிழரசுனுடன் தசரதமது கைகேயை சகிதம் படக்கூட்டி யுத்தம் செய்யப் போகிறபோது சம்பரன் கையை பார்த்து ஏ தமிழ் பெண்ணே நீ ஆரியனாகிய தசரதனை மணந்ததே தவறு ஆரியர் தமிழரை அழித்து தமது ஆரிய ஆட்சியை ஏற்படுத்த முயல்கின்றனர் அப்படி இருக்க இந்நாட்டு பழங்குடியும் தமிழனும் ஆகிய என்னை கொல்ல நீயும் சம்மதித்தது சரியோ குலத்தை கெடுக்க வந்த போடுதியே என்றான் இது கேட்ட கையை உன் புருஷனையே எதிர்த்தால் பிறகு தசரதன் தமிழனை எதிர்த்ததும் தன்னையும் தமிழச்சி என மதியாததும் ஆகிய இரு குற்றத்திற்காக தசரரிடம் இரண்டு மன்னிப்பு பத்திரம் எழுதி வாங்கினாள் பத்திரத்தில் கையை நினைக்கும் போது சக்கரவர்த்திக்கு விரோதமாகிய இரண்டு கொள்கைகளை கையையே நடவடிக்கைக்கு கொண்டு வரலாம் சர்வதேச சங்கத்தின் வேசையில் இப்பத்திரங்களும் இருக்கின்றன இராமன் பட்டத்திற்கு வருவதில் இவ்வளவு தடைகள் இருந்தாலும் இப்பொழுது நான் சொல்லுகிற படி நீங்கள் செய்வதாக வாக்களியுங்கள் ராமனுக்கு பட்டம் கட்ட முடியும் .என்று 'திருந்திய ராமாயணம்' என்ற சிறுகதையில் சம்பரன் என்ற தமிழரசன் கைகேயியைப் பார்த்து "தமிழ் பற்றற்ற நீ ஆரியனை மணந்தாய்?" என்று சொல்வது போல கதையைத் திருத்தி அமைத்திருக்கிறார்.

கைகேயி கதையின் முடிவில் இராமனைப் பார்த்து, என் கட்டளைக்குக் கீழ்ப்படி; இல்லையேல் இந்த இரு தமிழ்ப் பெண்களை எதிர்த்து நில் என்று சொல்வது போல தமிழ்ப் பற்று மிக்க கதைகளை எழுதியுள்ளார். ஆரியரான தசரதர் தமிழச்சி கைகேயியை மதியாததால் தமிழ்ப் பற்றுள்ள கைகேயி தன் கணவனையே எதிர்த்தாள் என்று இராமாயணக் கதையைத் திருத்தி சிறுகதை உருவாக்கியுள்ளார் பாரதிதாசன்.

**முடிவுரை**

இச்சமூகத்தில் மண்டிக் கிடக்கிற கண்மூடித்தனம் எல்லாம் மண்மூடிப் போக வேண்டும் என்று தன்னுடைய சீர்திருத்த கருத்துகளைப் பாக்களால்,

நாடகங்களால், திரைப்பட வசனங்களால், மட்டுமல்ல சிறுகதைகளாகவும் திண்ணமாகச் சொல்லியிருக்கிறார். பாவேந்தர் கதைகள் என்னவோ சிறுகதைகள் தான். ஆனால், சொல்லப்பட்ட சீர்திருத்தங்கள் சிறப்பானவை. பாவேந்தரின் கனவான சீர்திருந்திய சமூகம் விரைவில் கைவசப்படும். வைகறைத் துயில் எழுதல், வாழ்வில் விடா முயற்சி, ஒற்றுமையுடன் வாழ்தல், மரங்களைப் பாதுகாத்தல், பெண்மையைப் போற்றுதல், தமிழ்ப்பற்று, சுயமரியாதை, சமூக நல்லிணக்கம், தேசபக்தி போன்ற மாபெரும் வாழ்க்கை விழுமியங்களைக் கருவாகக் கொண்ட பாவேந்தர் பாரதிதாசனின் சிறுகதைகள் அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச் சொல்லப்பட வேண்டியவையும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவையும் ஆகும் .

**பார்வை நூல்கள்**

- பாரதிதாசன் சிறுகதைகள், பாரதிதாசன், தமிழ் வளர்ச்சித் துறை பதிப்பகம், 2017, சென்னை.
- பாரதிதாசன் சிறுகதைகள், முனைவர் அ.கோவிந்தராஜன், 2013, சென்னை.